சாட்சியாபுரம் ரயில்வே மேம்பால பணி

இன்று பூமிபூஜையுடன் தொடங்குகின்றது

சிவகாசி மக்களின் 30 ஆண்டுகால கோரிக்கை நிறைவேறுகிறது

சிவகாசி, ஜூலை 26: சிவகாசி மக்களின் 30 ஆண்டுகால கோரிக்கையான சாட்சியாபுரம் ரயில்வே மேம்பாலம் அமைக்கும் பணிகளை இன்று மாலை அமைச்சர்கள் சாத்தூர் ராமசந்திரன், தங்கம்தென்னரசு கலந்து கொண்டு தொடங்கி வைக்கின்றனர்.

விருதுநகர் மாவட்டத்தில் சிவகாசி மிகப்பெரும் தொழில் நகரமாக இருந்து வருகிறது. அச்சகங்கள், பட்டாசு ஆலைகள், சிறு குறுந் தொழில்கள் ஏராளமாக நடைபெற்று வருகின்றன. தொழில்கள் வளர்ச்சி பெற்றுள்ள நிலையில், அதற்கேற்ற சாலை வசதிகள் இல்லாத நிலையே உள்ளது. குறிப்பாக சிவகாசி - ஸ்ரீவில்லிபுத்தூர் சாலையில் உள்ள சாட்சியாபுரம் ரயில் பாதை மற்றும் சிவகாசி - விருதுநகர் சாலையில் உள்ள திருத்தங்கல் ரயில் பாதை பகுதிகளில் ரயில்வே மேம்பாலம் அமைக்க வேண்டும் என்று சுமார் 30 ஆண்டுகளுக்கு மேலாக சிவகாசி பகுதி மக்கள், அரசியல் கட்சியினர் வலியுறுத்தி வருகின்றனர். ஆனாலும் ரயில்வே மேம்பாலம் கட்டும் பணிகளில் பல்வேறு இடையூறுகள் ஏற்பட்டு வந்தது. இதில் சாட்சியாபுரத்தில் ரயில்வே மேம்பாலம் அமைக்க 2,818 சதுர மீட்டர் நிலம் கையகப்படுத்தப்பட்டு 23 நில உரிமையாளர்களுக்கு ரூ.28 கோடி வழங்கப்பட்டது.

சிவகாசி பெரியகுளம் கண்மாய் அருகே இரட்டை பாலம் முதல் சாட்சியாபுரம் பேருந்து நிறுத்தம் வரை 700 மீட்டர் நீளம், 12 மீட்டர் அகலத்தில் சுரங்கப்பாதையுடன் கூடிய ரயில்வே மேம்பாலம் அமைக்க ரூ.64 கோடியில் திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டது. இந்நிலையில் சாட்சியாபுரத்தில் ரயில்வே மேம்பாலம் அமைக்கும் பணிகளுக்கு இன்று மாலை பூமிபூஜை நடைபெறுகின்றது. இதில் அமைச்சர்கள் சாத்தூர் ராமசந்திரன், தங்கம்தென்னரசு, கலெக்டர் ஜெயசீலன், அசோகன் எம்எல்ஏ, மேயர் சங்கீதா இன்பம், துணை மேயர் விக்னேஷ் பிரியா காளிராஜன், யூனியன் சேர்மன் முத்துலட்சுமி, துணைத்தலைவர் விவேகன்ராஜ், சிவகாசி திமுக மாநகர செயலாளர் எஸ்.ஏ.உதயசூரியன் கலந்து கொண்டு பணிகளை தொடங்கி வைக்கின்றனர்.

இது குறித்து அசோகன் எம்எல்ஏ கூறும்போது, சிவகாசி மக்களின் 30 ஆண்டுகால கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் சாட்சியாபுரத்தில் ரயில்வே மேம்பாலம் அமைக்கும் பணிகள் தொடங்கி வைக்கப்பட உள்ளன. பணிகள் தொடங்கிய 18 மாதங்களில் முழுமையாக முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. பணிகளை விரைந்து முடித்து கொடுக்க வேண்டும் என்று சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரரை வலியுறுத்தியுள்ளேன். நவம்பர் மாதம் திருத்தங்கல்லிலும் ரயில்வே மேம்பாலம் அமைக்கும் பணிகள் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது என்றார்.

▶ சாட்சியாபுரத்தில் ரயில்வே மேம்பாலம் அமையும் பகுதி.

சிவகாசி ஒன்றியத்தில் வளர்ச்சி பணிகள் ஆய்வு

சிவகாசி, ஜூலை 26: சிவகாசி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் நடைபெற்று வரும் வளர்ச்சி பணிகளை கலெக்டர் ஜெயசீலன் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

சிவகாசி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் நடைபெற்று வரும் வளர்ச்சி பணிகள் குறித்து கலெக்டர் ஜெயசீலன் நேற்று நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். அதன்படி, சிவகாசி ஊராட்சி ஒன்றியம், சாமிநத்தம் ஊராட்சியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் ரூ.23 லட்சத்து 99 ஆயிரம் மதிப்பில் புதிய ஊரணி அமைக்கப்பட்டு வரும் பணிகளையும், தேவர்குளம் ஊராட்சியில் அயோத்திதாஸ் பண்டிதர் குடியிருப்பு அபிவிருத்தி திட்டத்தின் கீழ் ரூ.2 லட்சம் மதிப்பில் சமுதாயக்கூடம் மேம்படுத்தும் பணிகளையும் நேரில் சென்று பார்வையிட்டு பணிகளின் தரம் குறித்து ஆய்வு செய்தார்.

பணிகளை விரைவாகவும், தரமானதாகவும் முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர சம்மந்தப்பட்ட அரசு அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின் போது, திட்ட இயக்குநர் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) மரு.தண்டபாணி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சிவக்குமார், பத்மினி, தாசில்தார் வடிவேல், தேவர்குளம் ஊராட்சி மன்ற தலைவர் முத்து வள்ளி மச்சக்காளை, சாமிநத்தம் ஊராட்சி மன்ற தலைவர் மகாலட்சுமி பாலகுருசாமி, துணைத்தலைவர் முருகேஸ்வரி சேதுராஜ் மற்றும் உதவிப் பொறியாளர்கள், மேற்பார்வையாளர், அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

▶ சிவகாசி அருகே தேவர்குளம் ஊராட்சியில் வளர்ச்சி திட்ட பணிகளை கலெக்டர் ஜெயசீலன் பார்வையிட்டார்.

பட்ஜெட்டில் தமிழ்நாடு புறக்கணிப்பு

பாஜ அரசை கண்டித்து நாளை ஆர்ப்பாட்டம்

அமைச்சர்கள் அறிவிப்பு

காரியாபட்டி, ஜூலை 26: ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டை வஞ்சித்த பாஜ.வை கண்டித்து நாளை விருதுநகரில் ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

விருதுநகர் தெற்கு மாவட்ட செயலாளர் சாத்தூர் ராமச்சந்திரன், வடக்கு மாவட்ட செயலாளர் தங்கம்தென்னரசு ஆகியோர் கூட்டாக விடுத்துள்ள அறிக்கை வருமாறு: திமுக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தலின்படி, ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டை வஞ்சித்த பாஜ அரசை கண்டித்து நாளை காலை 10 மணியளவில் விருதுநகர், மாரியம்மன் கோவில் திடலில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது. இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் விருதுநகர் தெற்கு, வடக்கு மாவட்ட கழகத்தின் சார்பில் மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பேரூர், பகுதி கழக செயலாளர்கள், மாவட்டப் பிரதிநிதிகள், வட்ட, கிளை கழக நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் அனைவரும் தவறாது கலந்துகொள்ள வேண்டும். இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

எரிச்சநத்தம் பகுதியில்

ஆக்கிரமிப்பு கட்டிடங்கள் அகற்றம்

சிவகாசி, ஜூலை 26: சிவகாசி அருகே எரிச்சநத்தம் பகுதியில் 30க்கும் மேற்பட்ட ஆக்கிரமிப்பு கட்டிடங்களை நெடுஞ்சாலை துறையினர் நேற்று அகற்றினர்.

விருதுநகரில் இருந்து எரிச்சநத்தம், அழகாபுரி, மகாராஜபுரம் வழியாக வத்ராயிருப்புவரை மாநில நெடுஞ்சாலைதுறை சாலை உள்ளது. இதில் எரிச்சநத்தம் மெயின் ரோடு பகுதியில் நெடுஞ்சாலைதுறை மூலம் ரூ.75 லட்சம் மதிப்பீட்டில் புதிய வாறுகால் கட்டும் பணிகள் விரைவில் தொடங்கப்பட உள்ளன. வாறுகால் கட்டும் பணிக்காக அந்தப் பகுதியில் ஏராளமான ஆக்கிரமிப்பு கட்டிடங்கள் இடையூறாக இருந்தன. இந்த ஆக்கிரமிப்பு கட்டிடங்களை அகற்ற வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை வைத்தனர். அதனை தொடர்ந்து நேற்று எரிச்சநத்தம் பகுதியில் மெயின் ரோட்டில் உள்ள 30க்கும் மேற்பட்ட ஆக்கிரமிப்பு கட்டிடங்களை நெடுஞ்சாலைதுறையினர் ஜேசிபி இயந்திரம் மூலம் அகற்றினர். ஆக்கிரமிப்பு அகற்றும் பணிகளை நெடுஞ்சாலைத்துறை உதவி கோட்ட பொறியாளர் கணேசன், உதவி பொறியாளர் மதிவாணன் நேரடியாக பார்வையிட்டனர். ஆக்கிரமிப்பு பணிகள் முடிவடைந்த உடன் வாறுகால் அமைக்கும் பணிகள் விரைவில் தொடங்கும் என நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

▶ எரிச்சநத்தம் பகுதியில் ஆக்கிரமிப்பு கட்டிடங்களை நெடுஞ்சாலைத்துறையினர் நேற்று அகற்றினர்.

நகராட்சி ஊழியர்கள் போராட்டம்

விருதுநகர், ஜூலை 26: விருதுநகர் நகராட்சியில் பணியாற்று அலுவலர்கள், பணியாளர்கள் தமிழ்நாடு நகராட்சி குடிநீர் பணியாளர் சங்க மாநில தலைவர் சந்தானமுத்து தலைமையில் கோரிக்கை அட்டை அணிந்து பணியாற்றினர். அரசு கருவூலம் மூலம் ஊதியம் மற்றும் ஓய்வூதியம் வழங்க வேண்டும். பணியிட மாறுதல்கள் கலந்தாய்வு மூலம் மேற்கொள்ள வேண்டும். பழைய ஓய்வூதிய திட்டத்தை அமுல்படுத்த வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கை அட்டைகளை அணிந்து பணியாற்றினர்.

மருத்துவமனையில் ஆய்வு

▶ ராஜபாளையம் வட்டம், தளவாய்புரம் கிராமத்தில் உள்ள பழனிச்சாமி நாடார் கூட்டுறவு மருத்துவமனையில் கூடுதல் பதிவாளரும் மாமண்டல அலுவலருமான முருகன் ஆய்வு மேற்கொண்டார். அருகில் மண்டல இணை பதிவாளர் செந்தில்குமார், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் மேலாண்மை இயக்குனர் ராஜலட்சுமி, ஸ்ரீவில்லிபுத்தூர் சரக துணை பதிவாளர் வீரபாண்டி, கூட்டுறவு சார் பதிவாளர்கள் சரவணன், அழகுலட்சுமி உள்ளனர்.

இன்று நீதிமன்றங்கள் திறப்பு

அருப்புக்கோட்டை, ஜூலை 26: அருப்புக்கோட்டையில் கூடுதல் மாவட்ட நீதிமன்றம், ராஜபாளையத்தில் சார்பு நீதிமன்றம், காரியாபட்டி, வத்திராயிருப்பில் மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திறப்பு விழா இன்று அருப்புக்கோட்டை நாடார்கள் திருமண மண்டபத்தில் நடக்கிறது. நிகழ்ச்சியில் விருதுநகர் மாவட்ட முதன்மை நீதிபதி ஜெயக்குமார் வரவேற்புரையாற்றுகிறார். நீதிமன்றங்களை திறந்து வைத்து சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி பொறுப்பு கிருஷ்ணகுமார் சிறப்புரையாற்றுகிறார்.

விழாவில் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகள் சுரேஷ்குமார், ஜெகதீஷ் சந்திரா, புகழேந்தி, ராம கிருஷ்ணன், சட்டத்துறை அமைச்சர் ரகுபதி, கலெக்டர் ஜெயசீலன், மாவட்ட எஸ்பி பெரோஸ்கான் அப்துல்லா ஆகியோர் கலந்து கொள்கின்றனர். மாவட்ட குற்றவியல் தலைமை நீதிபதி ப்ரீத்தா நன்றி கூறுகிறார்.

அருப்புக்கோட்டை வழக்கறிஞர்கள் சங்கத் தலைவர் ஜோபு ராம்குமார், செயலாளர் ராஜேந்திரன், ஸ்ரீவில்லிபுத்தூர் வழக்கறிஞர் சங்கத் தலைவர் கதிரேசன், செயலாளர் ஜெயராஜ், ராஜபாளையம் வழக்கறிஞர் சங்கத் தலைவர் குமார், செயலாளர் சதீஷ்குமார் ஏற்பாடுகளை செய்துள்ளனர்.

வேளாண் இயந்திரம் சர்வீஸ் முகாம்

விருதுநகர், ஜூலை 26: விருதுநகர் கலெக்டர் அலுவலகத்தில் மாவட்ட அளவிலான வேளாண் இயந்திரங்கள், கருவிகள் பராமரிப்பு குறித்த முகாம் இன்று நடைபெற உள்ளது.

இதில் வேளாண் இயந்திரங்களை இயக்குதல், பராமரிக்கும் வழிமுறைகள் குறித்த விளக்கம் அளிக்கப்பட உள்ளது. மேலும் முகாமில் வேளாண் இயந்திரங்கள், கருவிகள் தயாரிக்கும் நிறுவனங்களின் பொறியாளர்களுடன் விவசாயிகள் நேரில் கலந்துரையாடி விளக்கம் பெறலாம். முகாமில் கலந்து கொள்ளும் இளைஞர்கள் மேம்பாட்டு பயிற்சியில் சேர்ந்து பயன்பெற ஊக்குவிக்கப்படும். எனவே விவசாயிகள் தங்களது வேளாண் இயந்திரங்கள், கருவிகளை கொண்டு வந்து இலவசமாக சர்வீஸ் செய்தும் பயன்பெறலாம்.

கூட்டுறவு கடன் சங்கத்தில் ஆய்வு

▶ விருதுநகர் மாவட்ட மாமண்டல அலுவலர் மற்றும் கூடுதல் பதிவாளர் முருகன் அருப்புக்கோட்டை வட்டாரத்திலுள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் கணினி மயமாக்குதல் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். அருகில் மண்டல இணைப்பதிவாளர் செந்தில்குமார், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி மேலாண்மை இயக்குநர் ராஜலெட்சுமி, அருப்புக்கோட்டை சரக துணைப் பதிவாளர் வீரபாண்டி, கூட்டுறவு சார்பதிவாளர்கள் அந்தோனிராஜ், முருகானந்தம் உள்ளனர்.

டாடா கேபிடல் லிமிடெட்

பதிவு முகவரி: 11ஆவது தளம், டவர் A, பெனின்சுலா வர்த்தகப் பூங்கா, கண்பத்ராவ் கடம் மார்க், லோயர் பரேல், மும்பை - 400013.
கிளை முகவரி: 2 ஆவது & 3 ஆவது தளம், சஜாய் மில், கதவு எண்.79, டி.எஸ். எண்.873/2, பி.டி.ராஜன் சாலை, பி.பி.குளம், மதுரை, தமிழ்நாடு-625002

அசையாச் சொத்து விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

(கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002 இன் விதி 8 (6) மற்றும் 9(1) கீழ்)

கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8 (6) மற்றும் விதி 9(1) விதிமுறையுடன் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 கீழ் அசையாச் சொத்துகள் விற்பனை மின்-ஏலம் அறிவிப்பு.

கடன் கணக்கு எண்.21351614 மற்றும் TCFLA048000001111 5212: திரு.செந்தில் குமார் N

டாடா கேபிடல் லிமிடெட் (டிசிஎல்) என்பது வங்கியல்லாத நிதிநிறுவனமாகும். நிறுவனங்கள் சட்டம்,1956 இன் விதிகளின் கீழ் இணைக்கப்பட்டது. மேலும் அதன் பதிவு அலுவலகம் 11ஆவது தளம், டவர் A, பெனின்சுலா வர்த்தகப் பூங்கா, கண்பத்ராவ் கடம் மார்க், லோயர் பரேல், மும்பை – 400013 என்ற முகவரியிலும் அதன் கிளை அலுவலகங்களில் ஒன்று தமிழ்நாட்டிலும் (கிளை) உள்ளது. டாடா கேபிடல் பைனான்சியல் சர்வீஸஸ் லிமிடெட்டிசிஎஃப்எல்) நிறுவனம் மற்றும் டாடா கிளீன்டெக் கேபிடல் லிமிடெட் (டிசிசிஎல்) நிறுவனம் ஆகியவற்றிற்கு இடையிலான ஏற்பாடு திட்டத்திற்கு தேசிய நிறுவன சட்ட தீர்ப்பாயம் (என்சிஎல்டி), மும்பை முழுமையான அனுமதி வழங்கிய **24.11.2023** தேதியிட்ட ஆணைக்கு இணங்கவும், நிறுவனங்கள் சட்டம் 2013 (கூறப்பட்ட திட்டம்) விதிகளின்படி பிரிவுகள் 230 இலிருந்து 232 வரை மற்றும் பிரிவு 66 மற்றும் பொருந்தக் கூடிய பிற பிரிவுகளின்படியும் இவை மாற்றித் தரக்கூடியவையாகவும் டாடா கேபிடல் லிமிடெட் மாற்றித்தரப்பட்டதற்கு உரியதாகவும் உள்ளது. அதன் அடிப்படையில் டிசிஎஃப்எல் மற்றும் டிசிஎல் (மாற்றித்தரக்கூடிய நிறுவனங்கள்) ஆகியவை டிசிஎல் ஆக மாற்றப்பட்டு அதன் தொடர்பாக அனைத்து சொத்துகள், சொத்துகள், உரிமைகள், பயன்கள், நலன்கள், கடமைகள், பொறுப்புகள், உடமைகள், ஒப்பந்தங்கள், ஒப்பந்தங்கள், பத்திரங்கள் ஏனையவை **01.01.2024 இலிருந்து** டிசிஎல்– உடன் இணைக்கப்பட்டுள்ளன. மேற்கூறப்பட்ட உத்தரவு மற்றும் திட்டத்திற்கு இணங்க, அனைத்து டிசிஎஃப்எல் நிர்வகிக்கப்பட்ட அனைத்து பயன்பாட்டு ஆவணங்களும் மற்றும் அது தொடர்பாக நிலுவையில் உள்ள அனைத்தும் விண்ணப்பதாரர் நிறுவனத்திற்கு மாற்றப்பட்டன. எனவே அதன் அடிப்படையில் கடன்தாரர்கள்/உபகடன்தாரர்களிடமிருந்து டிசிஎல் ஆனது கோருவதற்கு உரியதாகிறது.

இதன்மூலம் பொதுமக்களுக்குப் பொதுவாக மேலும் கீழ்க்காணும் கடன்தாரர் மற்றும்/ உப–கடன்தாரர் ஆகியோருக்கு குறிப்பாக வழங்கப்படும் அறிவிப்பாவது, **டாடா கேபிடல் லிமிடெட் (கடனீட்டு கடனீந்தோர்/டிசிஎல்)** வசம் அடமானம் வைக்கப்பட்ட, டாடா கேபிடல் லிமிடெடின் (கடனீட்டு கடனீந்தோர்) அதிகாரப்பூர்வ அதிகாரியால் சுவாதீனம் செய்யப்பட்டிருக்கும் கீழே விவரிக்கப்பட்ட அசையாச் சொத்தானது, **'உள்ளது உள்ளவிடத்தில்' & 'உள்ளது உள்ளவாறு'** மேலும் **'உள்ளது எதுவோ அது' அடிப்படையில் 3, செப்டம்பர், 2024 தேதியன்று** விற்பனை செய்யப்பட உள்ளது.

கடன் கணக்கு எண்கள் 21351614 மற்றும் TCFLA048000001111 5212 இன்படி கடன்தாரர்கள்/உபகடன்தாரர்கள்/ ஜாமீன்தாரர்களான (1) திரு.செந்தில்குமார் N, த/பெ, N.நாகராஜன், எண்.3/330, P.No.184, மதுரை டீச்சர்ஸ் சிட்டி, அழகர்கோவில் பிரதான சாலை, அப்பன் திருப்பதி அஞ்சல், மதுரை, தமிழ்நாடு–625301, **மேலும் உள்ள முகவரி** மனை எண்.212, டிடி.ஆர்எல் எண்.106/6 &106/7, மதுரை டீச்சர்ஸ் சிட்டி, மாத்தூர் கிராமம், மதுரை வடக்கு தாலுகா, மதுரை மாவட்டம், தமிழ்நாடு–625301, **(2) திருமதி. A.அனுராதா, க/பெ, திரு.,செந்தில்குமார் N,** எண்.3/330, P.No.184, மதுரை டீச்சர்ஸ் சிட்டி, அழகர்கோவில் பிரதான சாலை, அப்பன் திருப்பதி அஞ்சல், மதுரை, தமிழ்நாடு–625301 மேலும் **(3) M/s, திருப்பதி ஆபிஸ் புராடக்ட்ஸ், பிரதிநிதித்துவப்படுத்தும் அதன் உரிமையாளரான திரு.செந்தில்குமார் N,** 211, நாயக்கர் புதுத்தெரு, மதுரை, தமிழ்நாடு–625001 ஆகியோரின் கடனீட்டு கடன் 23, ஜூலை 2024இன்படி ரூ.1,25,61,108/– (ரூபாய் ஒரு கோடியே இருபத்தைந்து லட்சத்து அறுபத்து ஒராயிரத்து நூற்று எட்டு மட்டும்)– ஐ மீட்பதற்காக கடனீட்டு சொத்துகளை விற்பனை செய்ய உள்ளது.

இதன்மூலம் வழங்கப்படும் அறிவிப்பாவது, விற்பனை ஒத்தி வைப்பு/ விற்பனை நிறுத்தம் ஏதும் இல்லாதபட்சத்தில், மேற்கூறிய கடனீட்டுச் சொத்து/ சொத்து ஆனது மேற்கூறிய **3, செப்டம்பர் 2024 தேதியன்று பிற்பகல் 2.00 மணிக்கு** மின்–ஏலம் மூலம் அதன் கிளை அலுவலகமான **2 ஆவது & 3 ஆவது தளம், சஜாய் மில், கதவு எண்.79, டி.எஸ். எண்.873/2, பி.டி.ராஜன் சாலை, பி.பி.குளம், மதுரை, தமிழ்நாடு–625002 இல்** விற்பனை செய்யப்படும்.

மின்–ஏலத்தில் பங்கேற்பதற்கான முன்வைப்புத்தொகை கேப்பு வரைவோலை அடங்கிய முத்திரையிடப்பட்ட உறையானது **2, செப்டம்பர், 2024 தேதி அன்று மாலை 5 மணி வரை** அல்லது அதற்கு முன்பாக டாடா கேபிடல் லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரியிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

கடனீட்டு சொத்தின் விவரங்கள்	ஆக்கப் பூர்வமான சுவாதீன வகை/ கையக	நிர்ணய விலை (ரூ)	முன்வைப்புத் தொகை (ரூ)
சொத்து எண்.1: மதுரை மாவட்டம், மதுரை வடக்கு பதிவு மாவட்டம், தாமரைப்பட்டி துணை பதிவு மாவட்டம், மதுரை வடக்கு வட்டம், எண்.81, வெள்ளியங்குன்றம் கிராமம், ஹேம்லெட் மாத்தூர் கிராமம், பட்டா எண்.427, பழைய R.S.No.480/2 துணைப் பிரிவு UDRS No.105/6 இன்படி உள்ள 77 சென்ட்கள் அளவுள்ள நிலத்துடன் 0.22.5 ஏர்ஸ் பரப்பளவு உள்ள நிலம் ஒன்றாக இணைக்கப்பட்டு வீட்டு மனைகளாக மதுரை டீச்சர்ஸ் சிட்டி என்கிற பெயரில் பிரிக்கப்பட்டுள்ள பகுதியில் 2900 ச.அடி பரப்பளவு உள்ள UDRS No.105/6, மனை எண்.184 இன் **எல்லைகள்:** வடக்கில்: மனை எண்.173, கிழக்கில்: மனை எண்.183, தெற்கில்: 25 அடி அகல கிழக்கு மேற்கு பொதுச் சாலை, மேற்கில்: மனை எண்.185. இந்த எல்லைகளுடன் அளவீடு: கிழக்கு மேற்காக வடக்கில் 40 அடி, தெற்கில் 40 அடி, தெற்கு வடக்காக கிழக்கில் 60 அடி மேற்கில் 60 அடி அனைத்தும் சேர்ந்து 2400 ச.அடி மற்றும் அதன் தெற்கு பக்கத்தில் உள்ள 25 அடி பொது நடைபாதைக்காக விடப்பட்ட 500 ச.அடியுடன் சேர்த்து மொத்தம் 2900 ச.அடியாகும் அதாவது 6 சென்ட்கள் 284 ச.அடி பரப்பளவு உள்ள நிலம் அங்கே உள்ளது.	கையக	ரூ.59,00,000/- (ரூபாய் ஐம்பத்தொன்பது லட்சம்(கள்) மட்டும்)	ரூ.5,90,000/- (ரூபாய் ஐந்து லட்சத்து தொன்னூறு ஆயிரம் மட்டும்)
சொத்து எண்.2: மதுரை மாவட்டம், மதுரை வடக்கு பதிவு மாவட்டம், தாமரைப்பட்டி துணை பதிவு மாவட்டம், மதுரை வடக்கு வட்டம், எண்.81, வெள்ளியங்குன்றம் கிராமம், ஹேம்லெட் மாத்தூர் கிராமம், பட்டா எண்.427, பழைய R.S.No.481/6 துணைப் பிரிவு UDRS No.106/6 இன்படி உள்ள 56 சென்ட்கள் அளவுள்ள நிலத்துடன் 0.31.0 ஏர்ஸ் பரப்பளவு உள்ள நிலம், பழைய R.S.No.481/7 துணைப் பிரிவு UDRS No.106/7 இன்படி உள்ள 58 சென்ட்கள் அளவுள்ள நிலத்துடன் 0.23.5 ஏர்ஸ் நிலம் ஒன்றாக இணைக்கப்பட்டு வீட்டு மனைகளாக மதுரை டீச்சர்ஸ் சிட்டி என்கிற பெயரில் பிரிக்கப்பட்டுள்ள பகுதியில் UDRS No.106/6 & 108/7, 2063 ச.அடி பரப்பளவு உள்ள மனை எண்.212 இன் **எல்லைகள்:** வடக்கில்: 25 அடி அகல கிழக்கு மேற்கு பொதுச் சாலை, கிழக்கில்: மனை எண்.213, தெற்கில்: மனை எண்.231, மேற்கில்: மனை எண்.211. இந்த எல்லைகளுடன் நேரியல் அளவீடு: கிழக்கு மேற்காக வடக்கில் 33 அடி, தெற்கில் 33 அடி, தெற்கு வடக்காக கிழக்கில் 50 அடி மேற்கில் 50 அடி அனைத்தும் சேர்ந்து 1650 ச.அடி மற்றும் அதன் வடக்கு பக்கத்தில் உள்ள 25 அடி பொது நடைபாதைக்காக விடப்பட்ட 413 ச.அடியுடன் சேர்த்து மொத்தம் 2063 ச.அடியாகும் அதாவது 4 சென்ட்கள் 319 ச.அடி பரப்பளவு உள்ள நிலம் அங்கே உள்ளது.	கையக	ரூ.49,59,000/- (ரூபாய் நாற்பத்தொன்பது லட்சத்து ஐம்பத்தொன்ப தாயிரம் மட்டும்)	ரூ.4,95,900/- (ரூபாய் நான்கு லட்சத்து தொன்னூற்று ஐந்தாயிரத்து தொள்ளாயிரம் மட்டும்)

விற்பனைக்கான சொத்தின் விவரங்கள் அட்டவணையில் உள்ளன. மேலே விவரிக்கப்பட்டுள்ளபடி அடமான சொத்துக்குள் அமையும் பொருட்கள்/ வீட்டில் உள்ளவை ஏதேனும் இருந்தால், விற்பனை அறிவிப்பில் குறிப்பாக விவரிக்கப்படும் வரை, கடனீட்டுச் சொத்துடன் விற்பனைக்கு உரியதாகாது. மேற்கூறிய நிலுவைத் தொகை, வட்டி மற்றும் செலவுகள்(விற்பனைக்கான செலவு உட்பட) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியிடம் வழங்கப்பட்டாலோ, அல்லது மேற்கூறிய கடனீட்டுச் சொத்திற்கான நிலுவைத் தொகை, வட்டி மற்றும் செலவுகள் திருப்பிச் செலுத்தப்பட்டதற்கான சான்றுகளை அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியின் திருப்திக்கு உகந்த வகையில் தந்தாலோ விற்பனை நிறுத்தப்படும். இதன்மூலம் பொதுமக்கள் தங்கள் டெண்டரை தனிப்பட்ட முறையில் சமர்ப்பிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். எந்த அதிகாரியோ அல்லது விற்பனை நடவடிக்கையில் தொடர்புடைய எந்த பிற நபரோ நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஏலத்தில் பங்கெடுக்கவோ, அல்லது சொத்தின் விற்பனையில் எந்த பயனையும் அடைய முயற்சிக்கவோ கூடாது. சர்ஃபாசி சட்டம் 2002 இன் விதிகள் மற்றும் நிபந்தனைகளின் கீழ் விற்பனை நடைபெறும். மின் ஏலமான இணைய முகப்பான https://bankauctions.in இன் மூலமாக **3 செப்டம்பர், 2024 தேதியில் பிற்பகல் 2.00 முதல் 3.00 மணி வரை** ஒவ்வொன்றும் 10 நிமிட கால வரையறைக்குள் நடைபெறும். சொத்தைக் கொள்முதல் செய்வதற்காக முன்வைப்புத் தொகையை **டாடா கேபிடல் லிமிடெட்** என்ற பெயரில் மதுரையில் செலுத்த தக்கதான கேப்பு வரைவோலையை சமர்ப்பிக்க வேண்டும். சொத்தைப் பார்வையிடுதல் **23, ஆகஸ்ட் 2024 தேதியன்று காலை 11.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை** நடைபெறும்.

ஆர்வமுள்ள ஏலதாரர்கள் அதிகாரப்பூர்வ அதிகாரி **திரு. ராகேஷ் டாவ்னி கோக்காட்டு அவர்களை மின்னஞ்சல் முகவரி** rakesh.kokkattu@tatacapital.com இல் அல்லது செல்பேசி எண். 91–6282658079 இல் தொடர்பு கொள்ளலாம்.

விற்பனைக்கான நிபந்தனைகள் மற்றும் வரையறைகளைத் தெரிந்து கொள்ள கடனீட்டு கடனீந்தோரின் இணையதளமான https://bit.ly/4deEq3L இன் இணைப்பில் சென்றோ அல்லது அதிகாரப்பூர்வ அதிகாரி அல்லது சேவை வழங்குநர்– M/s.4Closure – ஐ தொடர்பு கொள்ளலாம்.

இடம்: மதுரை, தமிழ்நாடு
தேதி: 26.07.2024

ஒம்/- அதிகாரப்பூர்வ அதிகாரி,
டாடா கேபிடல் லிமிடெட்

கிளை முகவரி: 2 ஆவது & 3 ஆவது தளம், சஜாய் மில், கதவு எண்.79, டி.எஸ்.எண்.873/2, பி.டி.ராஜன் சாலை, பி.பி.குளம், மதுரை, தமிழ்நாடு-625002

விற்பனை மற்றும் புதிய சந்தா தொடர்பான விவரங்களுக்கு... தினகரன் 8904156777
9.30 AM - 6.00 PM